MELUR MUNICIPALITY

Minutes of the Council Meeting held on **30.07.2021** (Ordinary)

<table>
<tr><th>Resolution No.</th><th>Serial Number and subject in the Agenda</th><th>Decision of the Council</th></tr>
<tr><td>106</td><td>

**மன்றப்பொருள் எண்.1**

மேலூர் நகராட்சிக்கு எதிராக தனியார் மயம் நிறுவனத்தில் பணிபுரிந்த திரு.மதுரைவீரன் மற்றும் திரு.சுரேஷ்குமார் என்பவர்கள் பணிநியமனம் செய்யக்கோரி சென்னை உயர்நீதிமன்ற மதுரைகிளையில் வழக்கு தொடர்ந்துள்ளதால், நகராட்சி சார்பாக திரு.ஜே.குணசீலன்முத்தையா வழக்கறிஞரை ஆஜராக தெரிவித்ததைத் தொடர்ந்து மேற்கண்ட வழக்கறிஞருக்கான வழக்கு கட்டணம் மற்றும் வழக்கறிஞருக்கான கட்டணம் வழங்க மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன்அனுமதி வேண்டப்படுகிறது.

<table>
<tr><th>வ.எண்.</th><th>வழக்கு எண்.</th><th>தொகை ரூ</th></tr>
<tr><td>1.</td><td>W.P.No.6689/2021</td><td>9500</td></tr>
<tr><td>2.</td><td>W.P.No.6623/2021</td><td>9500</td></tr>
<tr><td>3.</td><td>W.P.No.8329/2020</td><td>3000</td></tr>
<tr><td>4.</td><td>W.P.No.8328/2020</td><td>3000</td></tr>
<tr><td></td><td></td><td>25000</td></tr>
</table>

அலுவலகக்குறிப்பு

அ.மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ. அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று வழக்கு கட்டணம் வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.367/2020/எச்1

</td><td>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>107</td><td>

**மன்றப்பொருள் எண்.2**

மேலூர் நகராட்சிக்குட்பட்ட வெங்கடேஸ்வரா நகர், ஐயப்பன்கோவில் வீதி, சிவன்கோவில் வீதி, சொக்கம்பட்டி, கோமதியாபுரம், நொண்டிகோவில்பட்டி, காந்தி நகர், பழையசுக்காம்பட்டி, பர்மாகாலனி, சிவகங்கை சாலை, திருவள்ளுவர் நகர், தெற்குப்பட்டி ஆகிய இடங்களில் பகிர்மான குழாய்களில் வால்வு பொருத்தும்பணி மற்றும் வெள்ளநாதன்பட்டி மில்கேட், மலம்பட்டி, சொக்கம்பட்டி அழகர்கோவில்ரோடு, பல்லராயன்பட்டி ஆகிய

</td><td>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | இடங்களில் உள்ள பகிர்மான குழாய்களில் பழுது ஏற்பட்டுள்ளதால், மேற்கண்ட இடங்களில் வால்வூ மற்றும் பைப்லைன் அமைக்க ரூ.4.50 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டமைக்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. தனிஅலுவலர் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம். | |
| 108 | **மன்றப்பொருள் எண்.3**<br>மேலூர் நகராட்சிக்குட்பட்ட நொண்டிகோவில்பட்டி, முகமதியாபுரம், மூவேந்தர் பண்பாட்டுக்கழகம் அருகில் சொக்கம்பட்டி, கோமதியாபுரம் , பேருந்துநிலையம் சைக்கிள் ஸ்டாண்ட் பகுதி, மலம்பட்டி பாலமுருகன்கோவில் குறுக்குதெரு. காந்தி நகர் , வாழைக்காய் கடை சந்து ஆகிய இடங்களில் உள்ள மழைநீர்வடிகால், பாலங்கள் பழுதடைந்து மழைக்காலங்களில் மழைநீர் வடியாமல் ஆங்காங்கே அடைப்பு ஏற்பட்டு நீர்தேங்கி நின்று சுற்றுசூழல் பாதிக்கப்பட்டு வருவதால் மேற்கண்ட மழைநீர் வடிகால், பாலங்களில் பழுதுப்பணி மேற்கொள்ள ரூ.9.80 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார்செய்யப்பட்டமைக்கு மன்றத்தின் அனுமதிகோரப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br>1.மன்றம்அனுமதிக்கலாம்.<br>2. தனிஅலுவலர் முன்அனுமதிபெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 109 | **மன்றப்பொருள் எண்.4**<br><br>மேலூர் நகராட்சிக்குட்பட்ட பட்டாக்குளம் மின்மயானத்தில் பழுதுப்பணிகள் பார்க்கப்பட்டு பொதுமக்களின் முழுபயன்பாட்டில் இருந்து வருகிறது. அதனை தொடர்ந்து நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் காணொளி வாயிலாக அறிவுறுத்தப்பட்டதாலும், நகராட்சி பொறியாளர் அறிவுரைக்கிணங்கவும் நவீன எரிவாயு தகனமேடை வளாகத்தில் பொதுமக்கள் இரவு நேரங்களில் கூட தகனமேடை மையம் இருக்கக்கூடிய இடம் எளிதில் அறியும் வண்ணம் நவீன Exterior Led Signage Board அமைக்க ரூ.196000/– க்கு மதிப்பீடு தயார்செய்யப்பட்டமைக்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு | அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | 1. மன்றம்அனுமதிக்கலாம்.<br>2. அவசரஅவசியம் கருதி தனிஅலுவலர் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம். கோப்பு எண்.878/2021/இ1 | |
| 110 | **மன்றப்பொருள் எண்.5**<br>பொதுசுகாதாரப்பிரிவில் வீடுவீடாக குப்பைகளை சேகரிக்கும் பணிக்கு பயன்படுத்தப்படும் 15 மூன்று சக்கர வாகனங்களை பழுதுநீக்கி உதிரிபாகங்களை பொருத்த தீர்மான எண்.56 நாள்.26.02.2021ல் அனுமதி பெறப்பட்டுள்ளத. மேலும் புதிதாக 2 மூன்று சக்கர வாகங்களை பழுதுநீக்கம் செய்து தருமாறு துப்புரவு ஆய்வாளர் கோரியுள்ளார் ஏற்கனவே தீர்மான எண்.50 நாள்.26.02.2021ல் மேற்படி செலவினங்களுக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது அனுமதிபெறப்பட்ட தொகைக்குள் புதிய வாகனங்களுக்கான பழுதுநீக்கும் செலவும் உட்பட்டு வருவதால் ஏற்கனவே குறைவான விலைப்புள்ளி வழங்கிய நிறுவனத்திற்கே 2 வண்டிகளை பழுதுநீக்கம் செய்ய உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>அ.மன்றம் அனுமதிக்கலாம்.<br>ஆ. அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். | அனுமதிக்கப்பட்டது. |
| 111 | **மன்றப்பொருள் எண்.6**<br><br>மேலூர் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவின் மூலம் உரக்கிடங்கில் தினசரி கொட்டப்படும் குப்பைகளை வாரம் இரண்டு நாட்கள் பொக்லைன் இயந்திரம் மூலம் குப்பைகள் ஒதுக்கப்பட்டு வந்தது. மேலூர் வேளாண்மை பொறியியல் சேவை கூட்டுறவு மையம் மூலம் பொக்லைன் வாடகைக்கு அமர்த்தப்பட்டு குப்பைகள் ஒதுக்கப்பட்டு வந்தநிலையில் மேற்படி நிறுவனம் கலைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்கள். எனவே குப்பைகளை ஒதுக்குவதற்கு பொக்லைன் வாடகைக்கு அமர்த்த அவசர அவசியம் கருதி உள்ளூர்(ம) வெளியூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.3,00,000/— ற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br><br>அ. மன்றம் அனுமதிக்கலாம். | அங்கீகரிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | ஆ. அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம். | |
| 112 | **மன்றப்பொருள் எண்.7**<br>பொதுமேலாளர் மதுரை மாவட்ட பால் உற்பத்தி கூட்டுறவு ஒன்றியத்தின் 07.2021ம் நாளிட்ட ந.க.எண். 2086/2021/விற்/—1 நாள். 05.07.2021 கடிதத்தில் மேலூர் நகராட்சி தினசரி சந்தை வார்டு சர்வே எண் பிளாக் 20, டி.எஸ்.நம்பர்.39 உள்ள வளாகத்தில் 20' x 10' என்ற அளவில் உள்ள இடத்தினை ஆவின் பால் விற்பனை செய்யும் முகவருக்கான இடம் வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்து அதற்கான அனுமதி வழங்க கோரியுள்ளார். மேலும் நகராட்சியின் நகரமைப்பு ஆய்வாளர்(பொ) அவர்களின் 07.07.2021ம் தேதிய அறிக்கையில் தினசரி சந்தையில் பொதுமக்கள் பயன்படுத்தப்படுத்த முடியாத இடிந்து விழும் நிலையில் உள்ள கழிப்பறை அமைந்துள்ள இடமான 20' x 10' என்ற அளவு உள்ள இடத்தினை ஒதுக்கீடு செய்யலாம் எனவும், மேலும் மேற்படி இடத்திற்கு தரை வாடகையாக மாதம் ரூ.3000/— என நிர்ணயம் செய்யலாம் எனவும் தெரிவித்துள்ளார்.<br>எனவே தினசரி சந்தை அமைந்துள்ள இடமான சர்வே எண். பிளாக் 20, டி.எஸ்.நம்பர்.39 உள்ள 20' x 10' காலியிடத்திற்கு மாத வாடகையாக ரூ.3000 நிர்ணயம் செய்து இடத்தினை ஒப்படைப்பு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு:<br>1) அனுமதிக்கலாம்.<br>2) அரசின் வழிகாட்டுதலின்படி நகராட்சிக்கு சொந்தமான இடத்தினை ஒப்படைப்பு செய்ய நடவடிக்கை மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.799/2021/அ2) | அங்கீகரிக்கப்பட்டது. |
| 113 | **மன்றப்பொருள் எண்.8**<br>பொதுசுகாதாரப்பிரிவில் உரக்கிடங்கில் குப்பைகளை ஒதுக்குவதற்கு பொக்லைன் இயந்திரம் (ஜே.சி.பிஇயந்திரம்) வாடகைக்கு பெற விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரு நிறுவனங்களிலிருந்து விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.<br><br>\| வ.எ \| பெயர் மற்றும் முகவரி \| தொகை ரூ. (ஒருமணிநேரத்திற்கு) \| | அங்கீகரிக்கப்பட்டது. |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>ண்<br>.</td><td></td><td></td></tr>
<tr><td>1</td><td>நிஷா கண்ஸ்ட்ரக்ஷன் எர்த் மூவர்ஸ் அன்ட் ஆட்டோ ஒர்க்ஸ் ,<br>226 பெரியகடைவீதி,<br>கே.வி.பி. வங்கி அருகில்,<br>மேலூர்</td><td>ரூ.1090/–</td></tr>
<tr><td>2</td><td>செந்தூர் எண்டர்பிரைசஸ்,<br>22, 3வது குறுக்குத்தெரு,<br>வானமாமலை நகர்,<br>மதுரை–625010.</td><td>ரூ.1200</td></tr>
</table>
மேற்கண்ட இரு நிறுவனங்களில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>
அலுவலகக்குறிப்பு<br><br>
அ. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ஆ. அவசர அவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணிஉத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண்.1848/2020/அ1
</td>
<td></td>
</tr>
<tr>
<td>114</td>
<td>
மன்றப்பொருள் எண்.9<br>
மேலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பராபரியாய் சுற்றித்திரியும் தெரு நாய்களை பிடித்து கருத்தடை அறுவைச்சிகிச்சை செய்து தடுப்பூசி போட்டு பிறகு பின் கவனிப்பு மேற்கொள்ள விலைப்புள்ளி கோரியதில் விலங்குகள் நல வாரியத்தின் அங்கீகாரம் பெற்ற பிராணி மித்ரன் நிறுவனம் மட்டும் மேற்படி பணியினை மேற்கொள்ள சம்மதம் தெரிவித்து விண்ணப்பம் செய்துள்ளனர். மேற்கண்ட நிறுவனம் பிராணிகள் நலவாரியத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதால், வேறு எந்தவொரு நிறுவனமும் முன்வராத காரணத்தினால், அரசாணை எண்.106, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள்.10.06.2008, நிர்ணயம் செய்துள்ள தொகையான ரூ.445/– க்கு பிராணி மித்ரன் மதுரை–1 என்ற நிறுவனத்திற்கு மேற்கண்ட பணியை மேற்கொள்ள உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு
</td>
<td>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | அ. மன்றம் அனுமதிக்கலாம்.<br>ஆ. அவசரஅவசியம் கருதி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.678/2021/எச்1 | |
| 115 | **மன்றப்பொருள் எண்.10**<br>இந்நகராட்சியில் அலுவலக பயன்பாட்டில் உள்ள கணினி தொடர்பான பொருட்கள் பழுதடைந்து விட்டதால் புதிதாக பொருட்கள் வாங்கவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.120000/— க்கும் மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>அ) அலுவலக பயன்பாட்டில் உள்ள கணினி தொடர்பான பொருட்கள் வாங்கவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.120000/— பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ஆ) அலுவலக பணியின் அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று குறைந்த விலைப்புள்ளி பொருட்கள் வாங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(கோப்பு எண்.922/2021/சி1) | அங்கீகரிக்கப்பட்டது. |
| 116 | **மன்றப்பொருள் எண்.11**<br>இந்நகராட்சியின் அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான கணினி பொருட்கள் விநியோகம் செய்ய பெறப்பட்ட விலைப்புள்ளிகள் கீழ்க்கண்ட விபரப்படி மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது. | அங்கீகரிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 1. | Green Systems,<br>149/2A Narimedu,<br>Madurai–625002 | Rs.1,33,111/–<br>(GST தவிர்த்து) |
| 2. | Jeeva Systems,<br>16, Channel Road,<br>Melur | Rs.1,46,201/–<br>(GST தவிர்த்து) |
| 3. | Sakthi Computers<br>161/4, Nagai Kadai Bazaar<br>Alagar Kovil Road,<br>Melur-625106 | Rs.1,18,840/–<br>(GST உட்பட) |

| | | |
|---|---|---|
| | அலுவலகக்குறிப்பு<br>அ) மேற்கண்ட விலைப்புள்ளியில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள மேலூா் , சக்திகம்ப்யூட்டா்ஸ், நிறுவனத்திற்கு பொருட்களை விநியோகம் செய்ய உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>ஆ) அலுவலக பயன்பாட்டின் அவசியம் கருதி பொருட்கள் விநியோகம் செய்ய உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம். | |
| 117 | **மன்றப்பொருள் எண்.12**<br>இந்நகராட்சியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்படும் பொதுப்பணிகளுக்கான ஒப்பந்தபுள்ளியில் கலந்துகொள்ள தம்மை ஒப்பந்ததாராக பதிவு செய்ய வேண்டி திரு.கே.பி.முனிச்சாமி என்பவா் சமா்ப்பித்துள்ள விண்ணப்பம் கூா்ந்தாய்வு செய்யப்பட்டு தொழில்நுட்ப ரீதியாக ஆவணங்கள் சரியாக உள்ளதால் தனியரது விண்ணப்பத்தினை ஏற்று மேலூா் நகராட்சியில் நடைபெறும் பொதுப்பணிகளுக்கு ஐந்தாம் நிலை ஒப்பந்ததாராக பதிவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) தனிஅலுவலா் முன்அனுமதி பெற்று பதிவு செய்ததையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>கோப்பு எண்.578/2021/இ1 | அனுமதிக்கப்பட்டது. |
| 118 | **மன்றப்பொருள் எண்.13**<br>இந்நகராட்சியில் ஒப்பந்தப்புள்ளி கோரப்படும் பொதுப்பணிகளுக்கான ஒப்பந்தபுள்ளியில் கலந்துகொள்ள தம்மை ஒப்பந்ததாராக பதிவு செய்ய வேண்டி திரு.கே.சுரேஷ் என்பவா் சமா்ப்பித்துள்ள விண்ணப்பம் கூா்ந்தாய்வு செய்யப்பட்டு தொழில்நுட்ப ரீதியாக ஆவணங்கள் சரியாக உள்ளதால் தனியரது விண்ணப்பத்தினை ஏற்று மேலூா் நகராட்சியில் நடைபெறும் பொதுப்பணிகளுக்கு ஐந்தாம் நிலை ஒப்பந்ததாராக பதிவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) தனிஅலுவலா் முன்அனுமதி பெற்று பதிவு செய்ததையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>கோப்பு எண்.259/2021/இ1 | அனுமதிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| 119 | **மன்றப்பொருள் எண்.14**<br>சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமைப்பொறியாளர்(முழுகூடுதல் பொறுப்பு) அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.21978–17/2020/பாசாதி–2 நாள் 04.02.2021–ன் படி இந்நகராட்சிக்கு சொந்தமான மலம்பட்டி உரக்கிடங்கில் ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி திட்டம் 2018–2019–ன் கீழ் ரூ.217.00 லெட்சம் மதீப்பீட்டில் 20KLD கொள்ளளவு கொண்ட கசடு கழிவு சுத்திகரிப்பு மையம் (FEACAL SLUDGE TREATMENT PLANT) அமைக்கப்பட்டு பணி முடிவுறும் நிலையில் உள்ளதால் கசடு கழிவு மேலாண்மை துணை விதிகளுக்கு அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி அனுமதியின் அடிப்படையில் பொதுமக்கள் அறியும் வண்ணம் துணைவிதிகள் குறித்து மாவட்ட செய்தி மற்றும் மக்கள் தொடர்புத்துறை மூலம் 17.02.2021 நாளிட்ட தமிழ்சுடர் தினசரி நாளிதழில் விளம்பரம் வெளியிடப்பட்டதில் மேற்படி துணைவிதிகள் குறித்து பொதுமக்களிடமிருந்து எவ்வித ஆட்சேபனையும் பெறப்படவில்லை . எனவே மேற்கண்ட கசடுகழிவுமேலாண்மை துணைவிதிகளை மாவட்ட அரசிதழில் வெளியிடவும், அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலககுறிப்பு–<br>1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) தனிஅலுவலர் முன்அனுமதிபெற்று அரசிதழில் வெளியிட்டமைக்கும் செலவினத்திற்கும் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.185/2021/இ1 | அங்கீகரிக்கப்பட்டது. |
| 120 | **மன்றப்பொருள் எண்.15**<br>நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களது தொலைபேசி செய்தியின்படியும் மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அலுவலகத்தின் அறிவுரையின்படியும், மேலூர் நகராட்சிக்கு 15வது மத்திய நிதிக்குழு பரிந்துரை (15th CFC) 2020–2021 திட்டத்தின் கீழ் இந்நகராட்சிக்கு சொந்தமாக புதிதாக ஜே.சி.பி. இயந்திரம் வாங்கும் பணிக்கு ரூ 29.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து இந்நகர்மன்ற தீர்மான எண்.105 நாள்.16.07.2021ல் அனுமதிக்கப்பட்டு சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு நிர்வாக அனுமதி பெறும்பொருட்டு மதிப்பீடு அனுப்பப்பட்டது. ஆனால் மேற்படி பணிக்கு கூடுதல் செலவினமாக உள்ளதால் திருத்திய கூடுதல் மதிப்பீடு ரூ 33.90 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டமைக்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது. | அங்கீகரிக்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| | வ. எண். / வேலையின் விபரம் / மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | |

| வ. எண். | வேலையின் விபரம் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் |
|---|---|---|
| 1. | இந்நகராட்சிக்கு சொந்தமாக புதிதாக ஜே.சி.பி. இயந்திரம் வாங்கும் பணி | 33.90 |
| | **மொத்தம்** | **33.90** |

அலுவலகக்குறிப்பு:-

1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) தனிஅலுவலரின் முன்அனுமதிபெற்று திருத்திய கூடுதல் மதிப்பீடு ரூ.33.90இலட்சத்திற்கு தயார் செய்தமைக்கும், நிர்வாக அனுமதிக்கு அனுப்பியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

121

## மன்றப்பொருள் எண்.16

மேலூர் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் தற்போது பரவி வரும் மூன்றாம் அலை கொரோனா தொற்றினை கட்டுப்படுத்தும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகாக அனைத்து தெருக்களிலும், தொற்று பாதித்த பகுதிகளிலும் தெளிப்பதற்கு பயன்படுத்தப்படும் லைசால், ஹைப்போகுளோரைடு திரவம் மற்றும் லெமன் கிராஸ் திரவம் ஆகியவற்றை விலைப்புள்ளிகள் கோரி வாங்கவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.10.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதார அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.391/2021/எச்1

அனுமதிக்கப்பட்டது.

122

## மன்றப்பொருள் எண்.17

மேலூர் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் கொரோனா தடுப்பு பணிக்கு தேவைப்படும் கிருமிநாசினிகள் விநியோகம் செய்ய, 22.07.2021 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

அனுமதிக்கப்பட்டது.

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td rowspan="2">வ. எண்.</td><td rowspan="2">நிறுவனத்தின் விபரம்</td><td colspan="2">வரப்பெற்றுள்ள<br>விலைப்புள்ளிகளின் விபரங்கள்</td></tr>
<tr><td>ஸ்ரீதாய்மூகாம்பிகை எக்ஸ்போர்ட்,<br>4, பூங்கா நகர் சுலீஸ்வரன்பட்டி,<br>பொள்ளாச்சி–642006</td><td>ஸ்ரீபாலாஜி மார்க்கெட்டிங்<br>திருமலை இல்லம்,<br>9–5–1 பஜார்தெரு, மேல்மாடி<br>அய்யம்பாளையம்–624204</td></tr>
<tr><td>1.</td><td>லைசால் 1 லிட்டர்</td><td>ரூ.200</td><td>ரூ.280</td></tr>
<tr><td>2.</td><td>லெமன்கிராஸ் ஆயில் 1 லிட்டர்</td><td>ரூ.2900</td><td>ரூ.3300</td></tr>
<tr><td>3.</td><td>சோடியம் ஹைபோ குளோரைட் 1 லிட்டர்</td><td>ரூ.47</td><td>ரூ.65</td></tr>
<tr><td></td><td></td><td></td><td></td></tr>
</table>
வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கியுள்ள திருவாளர்கள்,ஸ்ரீதாய்மூகாம்பிகை எக்ஸ்போர்ட், 4 பூங்கா நகர், சுலீஸ்வரன்பட்டி, பொள்ளாச்சி– 642006 என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு<br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. அவசர அவசியம் கருதி, தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.391/2021/எச்1)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>123</td>
<td>மன்றப்பொருள் எண்.18<br>
இந்நகராட்சிக்குட்பட்ட நவீன எரிவாயு தகனமேடை வளாகத்தில் பொதுமக்கள் இரவு நேரங்களில் கூட தகனமேடை மையம் இருக்கக்கூடிய இடம் எளிதில் அறியும் வண்ணம் நவீன Exterior Led Signage Board அமைக்க ரூ.196000/– க்கு மதிப்பீடு தயார்செய்யப்பட்டு 20.07.2021 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.<br>
1. M/s RMS Constructions, Madurai மதிப்பீட்டைவிட -0.05% குறைவு<br>
2. M/s Vision Adds , Madurai மதிப்பீட்டைவிட 1.15% அதிகம்
</td>
<td>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | பெறப்பட்ட மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br>பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட -0.05% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s RMS Constructions, Madurai நிறுவனத்திற்கு தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று பணிஉத்தரவு வழங்கியதை மன்றம்அனுமதிக்கலாம்.<br>**தனிஅலுவலர்,**<br>**மேலூர்நகராட்சி.** | |